பிற்பகல் 1-35

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிமன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

1.	அழகப்பா பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை)	திரு. மா. இராஜசேகர்
2.	அண்ணா பல்கலைக் கழகம், (ஆட்சிக் குழு)	திரு. பெ. பழனியப்பன்
3.	பாரதியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. கே.எஸ். பழனிச்சாமி திருமதி வி. சிவகாமி
4.	பாரதிதாசன் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திருமதி ஆர். சசிகலா, திரு. வை.சிவபுண்ணியம்
5.	சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. ராதாரவி
6.	தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	டாக்டர் .தே. குமாரதாஸ் திரு. வி.கே. லட்சுமணன்
7.	மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை)	திரு. எம். சக்திவேல் முருகன் திரு.ப. அரசன்
8.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு)	திரு. ப. சிதம்பரம்
9.	தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்	திரு. பி.கே. சேகர்பாபு (நிர்வாகக் குழு)
10.	தமிழ் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. சி. இராசேந்திரன் திரு. எம். ராம்குமார்
11.	பெரியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. எஸ்.கே. செல்வம் திரு. கே. கந்தசாமி.

2004 நவம்பர் 22] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்கள் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புமனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உறுப்பினரின் பதவிக்காலம் 6-5-2006 வரை ஆகும்.

பிற பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு, ஆட்சிமன்றப் பேரவை மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

9. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.